திருமயம் வட்டத்தில் மோட்டார்களுக்கு மின் இணைப்பு.

*வினா எண். 224—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின் சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகாவில் எத்தனை கிணறுகளுக்கான மின்சார மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கோரி மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) எத்தனை கிணறுகளுக்கு மின் இணைப்பு இந்த ஆண்டு கொடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. இராமச்சந்திரன்: (அ) 1444 மனுக்கள்.

(ஆ) சுமார் 150 பம்பு செட்டுகள்.

அரசு ஊழியர்களது சேமநிதிக் கணக்குகள்.

*வினா எண். 225—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில சர்க்கார் ஊழியர்களின் பிராவிடன்ட் பண்டு கணக்குகளை மத்திய சர்க்காருக்குப் பதிலாக மாநில சர்க்காரே நிர்வகிக்க உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. மீ. வின்செண்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்).

(அ) தற்போது அத்தகைய செயற் குறிப்பு எதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். கணேசன் : புயல், வெள்ளம், மற்ற இயற்கைக் கொடுமைகள் எல்லாம் கேட்டுக் கொண்டு வருவதில்லை. அவை அடிக்கடி வருகின்றன. இதனால் தொழிலாளர் தோழர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு ஆளாக்கப்படுகிறார்கள். வாழ்க்கை கூட அவர்களுக்கு நலிந்து விடுகிறது. இந்த ப்ராவிடண்ட் பண்ட் மத்திய அரசினால் நிர்வகிக்கப்படுகிற காரணத்தினால் தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான உதவியை உடனடியாகப் பெறுவதற்குத் தாமதம் ஏற்படுகிறது. எனவே அவர்கள் சௌகரியத்தை முன்னிட்டாவது இந்த வைப்பு நிதியை மாநில அரசே வைத்துக்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன.

1978 செப்டம்பர் 14]

[முற்பகல் 10-00]

திரு. மீ. வின்சென்ட் : (அமைச்சரின் பேரவை செயலர்), சம்பந்தப்பட்ட சேமநல நிதி கணக்கில் தவறுகள் ஏதும் இருந்தால் அந்தப் புகார்களைத் தங்கள் அலுவலகம் மூலம் அனுப்பி வைக்கலாம் என்று மாநில கணக்காய்வுத் துறைத்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்கள். மேலும் இந்தக் கணக்கை ஒழுங்காகக் கவனிக்க ஏற்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்திருக்கிறார்.

(ஆ) உடுக்குறியிடாத வினுக்கள்.

முதியோர் உதவித் தொகை பெறுவோர்.

வினு 401—திரு. செஞ்சி ந. ராமச்சந்திரன் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா —

தற்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை பெறுபவர்கள் எத்தனை பேர் ?

விடை :

1. இம்மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 4703.

2. உடல் ஊனமுற்ற ஆதரவற்றோர் ஒய்வூதியத்திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 605.

3. விதவைகள் ஒய்வூதியத் திட்டத்தின் கீழ் ஒய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 595.

வினு 402—திரு. நா. சுந்தரராஜ் : மாண்புமிகு நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமயம் தாலுக்காவில் எத்தனை பேர்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்கப்படுகிறது ?

(ஆ) எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க அரசு உத்தேசித்து உள்ளதா ?